## சைவநெறி தரம் 06

| வாரம் | தரம் | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|---|
| 01 | 5 | 3.0 | 3.1 | 1. சிவ சின்னங்கள் | • சிவசின்னங்களை அறிந்து கூறுவார்.<br>• சிவசின்னங்களைத் தரிக்கும் வழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.<br>• சிவசின்னங்களை அணிவதால் ஏற்படும் உடல், உள மாற்றங்களை அறிந்துகொள்வார். | 02 |
| 02 | | | 3.1.2 | 2. சித்திரைப் புத்தாண்டு | • சைவசமயத்தவர்களின் முக்கிய பண்டிகைகள் பற்றிக் கூறுவார்.<br>• புதுவருடப் பிறப்பைக் கொண்டாடும் முறையை விளக்கிக் கூறுவார்.<br>• விசேட தினங ்களின்போது கடைப்பிடிக்க வேண்டிய குடும்பப் பழக்க, வழக்கங்களை ஒழுங்குமுறையாக மேற்கொள்வார்.<br>• புதுவருடப்பிறப்புடன் தொடர்புடைய கருமங்களை ஒழுங்குமுறையாக மேற்கொள்வார்.<br>• மாதிரிப் புதுவருடப் பிறப்புக் கொண்டாட்ட நிகழ்வின் போது விருப்புடன் பங்குபற்றுவார். | 02 |
| 03 | | | 3.2 | 3. முன்னேஸ்வரம் | • ஈழத்திலுள்ள பழமைவாய்ந்த ஈஸ்வரங்கள் பற்றிய தகவல்களைக் கூறுவார்.<br>• ஈழத்திலுள்ள பழமைவாய்ந்த சிவத்தலங்களுள் முன்னேஸ்வரமும் ஒன்றாகுமென அறிந்து, ஆலயத் தல வரலாறு பற்றியும் அதன் சிறப்புப் பற்றியும் தேடியறிவார்.<br>• திருத்தல யாத்திரைகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவார | 02 |
| 04 | | 4.0 | 4.1 | 4. பஞ்சபுராணம் | • சமய வழிபாடுகளில் பக்தி சிரத்தையுடன் பங்குகொள்வார்.<br>• சமய வழிபாடுகளின்போது திருமுறைகளை முறையாகப் பண்ணோடு ஓதுவார்.<br>• பஞ்ச புராணங்களும் அவற்றைப் பாடியோர்களையும் பட்டியற்படுத்துவார். | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05 | | | | • குருபூசை | • சமய குரவர்களின் குருபூசைத் தினங்களை அறிந்து பாடசாலையில் பக்திபூர்வமாக அனுஷ்டிப்பார்.<br>• சமய குரவர்கள் நால்வரினதும் குருபூசைத் தினங்களைச் சரியாகக் கூறுவார் | 02 |
| 06 | | 5.0 | 5.1 | 5. குமரகுருபர சுவாமிகள் | • கதைகளை இறைநம்பிக்கையுடனும் இரசனையுடனும் செவிமடுப்பார்.<br>• இறைநம்பிக்கையுடன் கதைகளைக் கூறுவார்.<br>• கதைகளினூடாக இறைவனின் கருணையை உணர்ந்து பக்தியுடன் வணங்குவார்.<br>• முன்மாதிரியான சைவப் பிள்ளையாகத் துலங்குவார். | 02 |
| 07 | | 6.0 | 6.1 | 6. மங்கையற்கரசியார் | • நாயன்மார்கள், அருளாளர்கள் பற்றி அறிந்து கூறுவார்.<br>• நாயன்மார்களது வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்வில் ஒழுகுவார்.<br>• இறைவனின் கருணையை உணர்ந்து பக்தியுடன் வணங்குவார் | 02 |
| 08 | | | | 7. நல்வழி | • தெரிவுசெய்து வழங்கப்பட்டுள்ள நல்வழிப் பாடல்களை மனனஞ்செய்து பாடிக் காட்டுவார்.<br>• நல்வழிப் பாடல்களின் பொருளை விளங்கிக்கொள்வார்.<br>• நல்வழிப் பாடல்களின் பொருளைத் தமது மொழிநடையிற் கூறுவார். மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பார்.<br>• அறநெறிப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவார். | 02 |
| 09 | 6 | 1.0 | 1.2 | 1. சைவ இல்லம் | • சைவ இல்லத்தில் நாள்தோறும் காலை மாலை விளக்கேற்றி இறை வழிபாடு மேற்கொள்வர்<br>• இறைவழிபாட்டின் போது திழருமுறைப் பாடல்களை நாள்தோறும் ஓதுவார்<br>• இறைவழிபாட்டின் பின்னர் பெற்றோரின் காலில் வீழ்ந்து வணங்குவார் | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | • விசேட தினங்களின் போது கடைப்பிடிக்கப்படும் பழக்க வழக்கங்களை முறைப்படி பின்பற்றுவர் (உ-ம் மருத்து நீர் வைத்தல்) | |
| 10 | | | 1.3 | 2. நாளாந்த செயன் முறைகள் | • நாளாந்தம் காலையிலும் மாலையிலும் நீராடல் உடலும் உள்ளமும் துய்மையடையும் என்பதை விளங்கிக் கூறுவர்.<br>• நீறில்லா நெற்றி பாழ் என்பதற்கிணங்க திருநீறு முதலான சிவசின்னங்களை முறைப்படி தினமும் தரித்துக் கொள்வர்.<br>• திருநீற்றின் மகிமை பற்றியும் அதை பூசிக் கொள்வதன் அவசியத்தையும் மற்றவர்களுக்கு எடுத்துரைப்பர்<br>• வழிபாட்டின் போது தமக்காகவும் பிறருக்காகவும் பிரார்த்தனைகளில் ஈடுபடுவர்.<br>• எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க என்று இறைவனிடம் கேட்பது போன்று பிறரின் நலன்கருதி வழிபாடுகளில் ஈடுபடுவர்<br>• உண்ணும் போதொரு கைப்பிடி என்பதற்கிணங்க பகிர்ந்து உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வர். | 02 |
| 11 | | | 1.3 | 3. சமூகம் சார்ந்த விழுமியங்கள் | • எப்பொழுதும் உண்மை பேச வேண்டும் என்பதை உறுதியாக்கிக் கொள்வர்.<br>• எச்சந்தர்ப்பத்திலும் பெரியோரை கனம் பண்ணுவர்<br>• சைவ இல்லத்தில் நாள்தோறும் காலை மாலை விளக்கேற்றி இறை வழிபாடு மேற்கொள்வர்<br>• நன்றி மறவாது வாழவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பர்<br>• வாழ்வில் தான தர்மங்களில் ஈடுபடுவார்<br>• சமுகம் சார்ந்து கடைப்பிடிக்கப்படும் சமய விழுமியங்களை தவறாது கடைப்பிடித்து வாழ்வர் | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | | | 1.4 | 4. வாழ்வியல் சடங்குகள் | • பிறப்பு முதல் ஏடு தொடங்குதல் வரையான சடங்குகளை பட்டியல் படுத்துவர்.<br>• சீமந்தம்,நாமகரணம்,காது குத்துதல், பல்லுக் கொழுக்கட்டை, முடி எடுத்தல் போன்றசடங்குகளின் உண்மைத் தன்மையை விளக்குவர்.<br>• சுற்றாடலில் நடைபெறும் வாழ்வியல் சடங்குகளை நேரில் சென்று அவதானித்து கருத்துக்களை பரிமாறிக் கொள்வர்.<br>• வாழ்வியல் சடங்குகள் பற்றிய புதிய விடயங்களை தேடியறிவதற்கு பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி அறிந்து கொள்வார்<br>• சடங்குகளின் முக்கியத்துவத்தை விஞ்ஞான ரீதியாக தொடர்புபடுத்தி ஆராய்ந்து வெளிப்படுத்துவார். | 02 |
| 13 | | | 1.4 | 5. விரதங்கள் பண்டிகைகள் | • விரதம் என்றால் என்ன என்பதை விவரிப்பார்.<br>• பண்டிகை என்றால் என்ன என்பதை விவரிப்பார்.<br>• விரதம், பண்டிகை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை ஆராய்ந்து கூறுவார்.<br>• விரதவகைகளை வகைப்படுத்திக் காட்டுவார்.<br>• பண்டிகைகள் கொண்டாடப்பட வேண்டியதன் அவசியத்தை விளங்கிக் கொள்வர்.<br>• விரதம், பண்டிகை என்பவற்றுக்கான வரைவிலக்கணங்களை வரைவிலக்கணப்படுத்துவர்.<br>• விரதங்கள் பண்டிகைகள் தொடர்பான பத்திரிகைச் செய்திகளை சேகரித்து காட்சிப்படுத்துவர். | 02 |
| 14 | | 2.0 | 2.2 | 6. இளையான்குடி மாறநாயனார் | • இளையான்குடி மாறநாயனாரின் சிவத்தொண்டினை விவரிப்பார்.<br>• இளையான் குடிமாறநாயனாரிடம் காணப்பட்ட நற்பண்புகளை எடுத்துரைப்பர். | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | • இளையான்குடிமாற நாயனாரின் செயற்பாடுகளுக்கு மதிப்பளிப்பர்.<br>• இளையான்குடிமாற நாயனாரின் சிவத்தொண்டுகளை தாமும் பின்பற்றி சைவசமயத்தை மேன்மையுறச் செய்யும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்..<br>• இளையான்குடிமாற நாயனாரின் பணிகளில் ஏனையவரையும் ஈடுபடத் தூண்டுவர்.<br>• இறைவனை வழிபடுவோருக்கு இறைவன் அருள்புரிவான் என்பதை எடுத்துக் கூறுவர். | |
| *15* | | *3.0* | *3.1* | 7. திருமுறைப்பாடல்கள் (பஞ்சபுராணம்) | • பஞ்ச புராணங்கள் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் பாடும் வழக்கத்தை கடைப்பிடிப்பர்<br>• பாடல்களை பண்ணோடு பாடுவர்<br>• வரிக்கிரமமாக, பிழைகளின்றி இறைசிந்தனையுடன் தோத்திரப்பாடல்களை பாடுவர்<br>• பஞ்ச புராணத்தில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்பன அடங்கும் என்பதை அறிந்து கொள்வர்.<br>• முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும என்பதை விவரிப்பர்.<br>• பஞ்ச புராணப் பாடல்களின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பர். | *02* |
| *16* | | *4.0* | *4.1* | 8. ஆலய வழிபாடு | • ஆலயம் என்பதன் பொருளை விளக்குவர்.<br>• ஆலய வழிபாட்டின் அவசியம் பற்றி விபரிப்பர்.<br>• ஆலயத்திற்கு கொண்டு செல்லக் கூடிய பூசைப் பொருட்களை பெயரிடுவர்.<br>• ஆலயத்தில் செய்யத்தக்க, செய்யத்தகாத செயல்களை விபரிப்பர் | *02* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | • ஆலயத்தில் வழிபடும் ஒழுங்குமுறையை விளக்கிக் கூறுவர்.<br>• ஆலயத்தில் நடைபெறும் பூசைகள் விழாக்கள் பற்றி விபரிப்பர்.<br>• ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற்கு ஏற்ப வழிபாடுகளில் ஈடுபடுவர். | |
| *17* | | *5.0* | *5.1* | *9. சமய குரவர் நால்வர்* | • சமய குரவர்கள் நால்வரும் இறைவன் அருள் பெற்றவர்கள் என்பதை அறிந்து கொள்வர்.<br>• சமய குரவர்கள் நால்வரும் இறையருளுடன் அற்புதங்களைச் செய்து, மக்களின் துன்பத்தை நீக்கி இறைபக்தியை வளர்த்தனர் என்பதை கதைகளுடாக விவரிப்பர்.<br>• சமய குரவர்களின் குரு பூசைத்தினங்களைக் கொண்டாடி அவர்களின் பணிகளுக்கு மதிப்பளிப்பர்.<br>• சமய குரவர்கள் பாடிய தேவாரப் பதிகங்களை மனனம் செய்து பாடுவர்.<br>• சமய குரவர்களின் பணிகளை தாம் வாழும் சூழலில் முன்னெடுத்து பணிகளில் ஈடுபடுவர். | *02* |
| *18* | | *6.0* | *6.1* | *10. முப்பொருள் (அறிமுகம்)* | • சைவ சித்தாந்தம் கூறும் உண்மைப் பொருட்கள் மூன்று என்பதை தெளிவு படுத்துவர<br>• முப்பொருட்களைக் கூறுவர்.<br>• ஆன்மாக்களுக்கு வழங்கப்படும் மறு பெயர் மூன்று எழுதிக்காட்டுவர்.<br>• மும்மலங்களை விளக்கிக் கூறுவர். பசுவானது இறைவனை அடைய முடியாது தடுப்பதில் பாசத்தின் செயற்பாடுகளை பட்டியற்படுத்துவர்.<br>• பாசத்திலிருந்து ஆன்மா விடுபடுகின்ற போதே பதியை அடைகின்றது என்பதை ஏற்பர். | *02* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *19* | | *7.0* | *7.1* | *11. நாட்டார் வழிபாடு (அறிமுகம்)* | • ஆகமம் சாரா வழிபாட்டின் வரைவிலக் கணத்ததைக் கூறுவர்<br>• ஆகமம் சாரா தெய்வங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவர்<br>• பிரதேச ரீதியாகக் காணப்படும் நாட்டார தெய்வங்கள் பற்றியும், சமய நம்பிக்கைகளையும் ஏற்று மதிப்பளிப்பர்<br>• ஆகமம் சாரா வழிபாடு இன்று வரை நிலைத்து நிற்பதற்கான காரணத்தை ஏற்றுக் கொள்ளுவர்.<br>• ஆகமம் சாரா வழிபாட்டினால் கிடைக்கும் பயன் களை விளக்குவர். | *02* |
| *20* | | *8.0* | *8.1* | *12. ஈழத்து சைவ ஆலயங்கள்* | • விநாயகர் ஆலயங்களில் பறாளை விநாயகர் ஆலயம் பற்றி அறிந்து வழிபாடுகளில் ஈடுபடுவர்<br>• திருக்கோணேஸ்வரர் ஆலயம் பற்றி அறிந்து வழிபாடுகளில் ஈடுபடுவர்.<br>• மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் பற்றி அறிந்து வழிபாடுகளில் ஈடுபடுவர் | *02* |